www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 024

10 யூலை 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் படுகொலைகளின் பின்னணியில் கே.பி மாபியா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப்பொறுப்பாளர் லெப்.கேணல் நாதன், ஈழமுரசு பத்திரிகையின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜன் ஆகியோர் கடந்த 1996ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் நாளன்று பாரிசில் வைத்து சிறீலங்கா புலனாய்வுத்துறையை சேர்ந்த ஆயுத தாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்களின் படுகொலைக்கு கே.பி மாபியா உடந்தையாக இருந்ததாக தற்பொழுது கொழும்பில் இருந்து கசியும் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த வாரம் சிறீலங்கா அரசாங்கத்தின் லேக்ஹவுஸ் செய்தியாளர்களுக்கும், தேசவிரோதி கே.பியிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கோத்தபாய குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்பொழுது நாதன் - கஜன் படுகொலைகள் தொடர்பாக சிங்கள செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பிய பொழுது,



தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென்று புலம்பெயர் தேசங்களில் திரட்டப்பட்ட நிதியை தனது தனிப்பட்ட வணிக நிறுவனங்களில் தான் முதலீடு செய்ய முற்பட்டதை எதிர்த்ததன் காரணமாகவும், திலகரை வன்னிக்கு



அனுப்புவதற்காகவுமே நாதனை சிறீலங்கா புலனாய்வுத்துறையினர் சுட்டுப் படுகொலை செய்வதற்கான தகவல்களை தான் வழங்கியதாக கே.பி வாக்குமூலமளித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு தாய்லாந்திலும், டோஹாவிலும் தனிப்பட்ட பெயரில் இரண்டு நிறுவனங்களைத் தொடங்குவதற்கு தேசிய பாதுகாப்பு நிதியை தன்னிடம் வழங்குமாறு நாதனிடம் தான் கோரியதாகவும், எனினும் இது தொடர்பாக தலைமைக்கு அறிவிப்பதற்கு நாதன் முற்பட்டதை அடுத்து அவரை சுட்டுப் படுகொலை செய்வதற்கான தகவல்களை சிறீலங்கா புலனாய்வுப் பிரிவினரிடம் வழங்குவதை தவிர தனக்கு வேறு வழிகள் எவையும் இருக்கவில்லை என்றும் கே.பி தெரிவித்துள்ளார்.

நாதனின் படுகொலைக்குப் பின்னர் சர்வேயிடம் நிதிப் பொறுப்பையும், மனோவிடம் நிர்வாகப் பொறுப்பையும் ஒப்படைத்து, திலகர் மீது தான் பழிசுமத்தியதாகவும், இந்தியப் படைகளிடம் பிடிபட்ட சுக்ளாவின் உதவியுடனேயே நாதனை திலகர் குழு கொன்றதாக மனோ ஊடாக தான் செய்திகளை கசியவிட்டதாகவும் கே.பி கூறியுள்ளார்.

சிறீலங்கா புலனாய்வுப் பிரிவினருடன் எவ்வாறு நீங்கள் தொடர்பை ஏற்படுத்தினீர்கள்? என்று கே.பியிடம் கேட்கப்பட்ட பொழுது, கருணாவின் நண்பரான டென்மார்க்கில் வசிக்கும் தம்பா என்பவரின் ஊடாகவே நாதனின் நடமாட்டங்கள் தொடர்பான தகவல்களை அப்போது சிறீலங்கா புலனாய்



வுத்துறைக்கு தான் வழங்கியதாகவும் கே.பி பதிலளித்ததாக, சந்திப்பில் கலந்து கொண்ட லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாசகர் கடிதம்

# தமிழ் மக்களால் மன்னிக்கப்படாத துரோகி கே.பி

வணக்கம்!

தங்கள் இணைய இதழின் வாடிக் கையாளனின் மனம் திறந்த மடலாக இதனை தாங்களிற்கு எழுதுகின்றேன்!



உலத்தில் வாழும் தமிழ் மக்களால் மன்னித்துக்கொள்ள முடியாத துரோகி யாக கே.பி காணப்படுகின்றார் என் பதை மக்கள் சார்பான எனது கருத் தை உலகத்தில் வாழுகின்ற மக்கள் அனைவருக்கும் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கே.பி. ஓர் துரேகியிலும் மேலானவர் என்பதை நாங்கள் தற்போது நன்கு உணர்ந்துள்ளோம். நீங்கள் எடுத்து ரைக்கும் உண்மைகளை முதலில் புறக்கணித்தவர்கள் எல்லலோரும் உங்கள் கருத்துக்களையும் உண் மைகளையும் தற்போது அறிந்திருப் பார்கள் என்பதை நன்கு என்போன்ற வாசகர்கள் ஊடாக உணரக்கூடியதாக உள்ளது.

உண்மையில் கருணா என்ற துரேகியை மையங்கொண்டே கே.பியை ஸ்ரீலங்காப்படையினர் வலை யில் வீழ்த்தியுள்ளார்கள். உண்மையில் இவர் தமிழ் மக்களுக்கல்ல சிங்கள மக்களுக்கும் துரேகியாகத்தான் காணப்டுகின்றார்.

ஆயிரக்கணக்கான படையினரை விடுதலைப்புலிகள் கொன்றார்கள் என் றாலும் காயப்படுத்தினார்கள் என்றாலும் அதற்கு காரணம் ஆயுதம் தான். இந்த ஆயுதப்பொருட்களை அன்று விடுதலைப்புலிகளுக்கு எடுத்துக் கொடுத்தவர் கே.பி என்பதை சிங்கள மக்கள் நன்கு உணரவேண்டும். இவ்வாறு பின்னான நாட்களில் விடுதலைப்புலிகளின் பதினாறிற்கும் மேற்பட்ட கப்பல்களை கடலில் வைத்து தகர்க்க தகவலை ஸ்ரீலங் காப்படையினருக்கு வழங்கியவரும் கே.பி தான் என்பதை நாங்கள் நன்கு உணர்கின்றோம். அந்தவகையில் ஸ்ரீலங்காப்படையின் வலைக்குள் வீழ்ந்த கே.பி தமிழ் மக்களால் அல்ல சிங்கள மக்களாலும் மன்னிக்க முடியாத துரோகி ஆககாணப்படு



கின்றார்.

இன்நிலையில் நான் உலகத்தமிழ் மக்களிடம் ஒன்றினை வேண்டி நிக் கின்றேன். கே.பி போன்ற செயற்பாட்டா ளர்களின் வலைக்குள் நீங்கள் வீழ்ந்து விடாமல் இருப்பதை தக்கவைத் துக்கொண்டு எமது விடுதலையின் பணியினை முன்னெடுக்குமாறு வேண் டுகின்றேன்

நன்றி

என்றும் கறுப்பின் நண்பன்

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை





